# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2024

2011 **பிறந்தவர்கள்** பின்வரும் 8 குறள்களை மட்டும் ஒப்பித்தல் செய்தல். குறள்களுக்கான பொருள் விளக்கம் கூறத்தேவையில்லை.

1. **பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலிற் பெரிது.** (குறள் 103)

பயன் எதையும் எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவியின் தன்மையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

2. **அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.** (குறள் 45)

குடும்ப வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கு இடையிலும் அன்பும் அறம் செய்யும் குணமும் இருக்குமானால், அதுவே அவ்வாழ்க்கையின் பண்பும் பயனுமாகும்.

3. **பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை உடைய செயல்.** (குறள் 975)

செயற்கரிய செயல்களை ஆற்ற வல்லவர்கள் பெருமைக்குரியவர்கள்.

4. **அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி.** (குறள் 226)

பொருட்களைக் களஞ்சியத்தில் சேர்த்து வைப்பது போல, நாம் பசித்திருப்போருக்கு உணவளித்து நல்லறங்களைச் சேர்ப்போம்.

5. **இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.** (குறள் 100)

இனிய சொற்கள் இருக்கும்போது கடுமையான சொற்களைக் கூறுவது ஒரு மரத்தில் பழங்கள் இருக்கும் போது அதனை விட்டுவிட்டுக் காய்களைப் பறித்து உண்பதைப் போன்றதாகும்.

6. **வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்.** (குறள் 291)

வாய்மை என்று சொல்லப்படுவது யாது என்றால் பிறருக்குத் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

7. **நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல**
**அன்றே மறப்பது நன்று.** (குறள் 108)

ஒருவர் செய்த நல்ல செயலை மறக்கக்கூடாது. அவர் செய்த தீய செயலை அப்பொழுதே மறப்பது நன்று.

8. **நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான்நல்கா தாகி விடின்.** (குறள் 17)

மேகம் கடலிலிருந்து நீரைக் கொண்டு அதனிடத்திலேயே பெய்யாமல் விடுமானால், பெரிய கடலும் தன் வளம் குன்றிப் போகும்.

**வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவரர்கள்.**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை

**வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவரர்கள்.**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை